# முக்கிய அறிவித்தல்

## வவுனியா வடக்கு பிரதேச சபை நெடுங்கேணி

## கழிவுப்பொருட்களை வகைப்படுத்தி வளமாக வாழ்வோம்

வவுனியா வடக்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள திண்மக்கழிவுகளை தரம் பிரித்து அப்புறப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் **கட்டாயமாக்கப்பட்டுள்ளது.**

தங்களால் வழங்கப்படும் கழிவுகளை நான்கு விதமாக பின்வருமாறு தரம் பிரித்து எமது பிரதேச சபையின் வாகனத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டும். **தரம் பிரிக்காது வழங்கப்படும் கழிவுகள் எம்மால் சேகரிக்கப்பட மாட்டாது** என்பதனை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

1. **பச்சை நிறப்பைகள் - உணவக்கழிவுகள்**
2. **சிவப்பு நிறப்பைகள் - பிளாஸ்ரிக் மற்றும் பொலுத்தீன் கழிவுகள்**
3. **மஞ்சள் நிறப்பைகள் - கடதாசிகள்**
4. **நீல நிறப்பைகள் - கண்ணாடி மற்றும் உலோகக் கழிவுகள்**

கழிவுகளைத் தரம் பிரிப்பதற்குரிய நிறப்பைகளை, ஒரு பை ரூபா 20.00 வீதம் தங்களுக்கு தேவையான அளவு பைகளை பிரதேச சபையிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். பிரதேச சபையின் திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டத்திற்கு தங்களின் பரிபூரண ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். மேற்படி நடைமுறைகளை பின்பற்றாதவர்களுக்கு எதிராக எவ்விதமான முன்னறிவித்தலுமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு பிரதேச சபையின் அலுவலக தொலைபேசி இலக்கம் **024-2030200,** மின்னஞ்சல் முகவரி **Vnpsnk@gmail.com** உடன் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி.
01.02.2024